
# விடியல்

THE DAWN மாத இதழ்

பொழுது - 99
ஜுலை 2017



ஜுலை 15

## பெருந்தலைவர் காமராஜர் பிறந்த தினம்

KSR COLLEGE OF ARTS AND SCIENCE
INDIA
Knowledge is Power

விடியல் மாத இதழ் (தனிச்சுற்றுக்கு மட்டும்)
வெளியீடு: தமிழ்த்துறை
கே.எஸ். ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
திருச்செங்கோடு - 637 215, தமிழ்நாடு, இந்தியா.
*fb* : facebook.com/ksrcasthamizh.vidiyal
*Blog* : *ksrcasthamizh.blogspot.in*
*Email* : *vidiyalmagazhine@gmail.com*
*Website* : *ksrcas.edu*

# விடியல்
## The Dawn

இதழ்-99, ஜூலை-2017


**கௌரவ ஆசிரியர்**
**முனைவர் வே. இராதாகிருஷ்ணன்**
கல்லூரி முதல்வர்

**ஆசிரியர்**
**முனைவர் சி.ரா. சுரேஷ்**
தமிழ்த்துறைத்தலைவர்

**இணையாசிரியர்**
**திரு. மு.சதீஸ்குமார்**
தமிழ் உதவிப்பேராசிரியர்

**ஆசிரியர் குழு**
திருமதி. சு.சாந்தி
முனைவர் கோ.இரவிச்சந்திரன்
திரு. செ.தங்கராஜ்
முனைவர் ப.பிரதீபா
முனைவர் சு.முப்பிடாதி
திரு. மு.சத்தியராஜ்
முனைவர் ப.சிலம்பரசன்
திரு. ந.சரவணன்
திரு ஆ.கௌரிசங்கர்
திரு. சி.கிருஷ்ணமூர்த்தி
திரு. து.சூசைபிரகாசம்
திரு. ரா.தர்மதுரை
செல்வி. மா.சத்யப்பிரியா
திருமதி கொ.சத்யா
திருமதி கா.வெண்ணிலா


## தலையங்கம்
### கே.காமராசர் பிறந்த தினம்

**"கல்வியே தேசத்தின் கண்களைத் திறக்கும்"** என்று கூறி பட்டி தொட்டிகளெல்லாம் பள்ளிக்கூடங்களைக் கட்டியவர். ஏழைப்பிள்ளைகளும் பள்ளிக்கு வரவேண்டும் என்பதால் புரட்சிக்கரமான மதியஉணவுத் திட்டத்தை அறிமுகம் செய்தவர். தமிழகத்தில் நம்ப முடியாத நல்லாட்சியைத் தந்து **இறவாப் புகழ்பெற்ற அந்த உன்னதத் தலைவர் கர்மவீரர்** காமராஜர்.

**"கல்விக்கண் திறந்த கர்மவீரர் நீ..!**
**தமிழகத்தின் வளர்ச்சிக்கு வித்திட்ட**
**தன்னலமில்லா தலைவன் நீ..!**
**பட்டம் வாங்காமல் உலகை**
**பகுத்தறிந்த பட்டதாரி நீ..!"**

காமராஜர் கல்வித் துறையில் மட்டுமல்லாமல், நீர்ப்பாசனத்திட்டங்கள், மின்திட்டங்கள் போன்றவற்றிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தினார். காமராஜர் ஆட்சியில் தமிழகம் தொழில்வளத்தில், வடநாட்டு மாநிலங்களைப் பின்னுக்குத் தள்ளி இரண்டாம் இடத்தைப் பிடித்தது.


© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)



வெளியீடு:
**தமிழ்த்துறை**
**கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி**(தன்னாட்சி)
**திருச்செங்கோடு-637 215. தமிழ்நாடு, இந்தியா.**
**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal
**Blog:** ksrcasthamizh.blogspot.in **E-mail:** vidiyalmagazhine@gmail.com
**Website:** ksrcas.edu



All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publish

தமிழ்நாட்டை ஆண்ட முதலமைச்சர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவராகக் கருதப்படுபவர், பெருந்தலைவர் காமராஜர். தமிழகத்தை ஒன்பது ஆண்டு காலம் ஆட்சிசெய்த இவருடைய காலம், தமிழக அரசியல் வரலாற்றில் **பொற்காலமாக** கருதப்படுகிறது. தன்னுடைய உழைப்பால், தொண்டால், படிப்படியாக உயர்ந்த இவர், **'பெருந் தலைவர்', 'தென்னாட்டு காந்தி', 'படிக்காத மேதை', 'கர்ம வீரர்', 'கல்விக்கண் திறந்த காமராஜர்'** எனப் பல்வேறு சிறப்பு பெயர்களால் அழைக்கப்படுகிறார்.

முதல்வரான பின்னர், தன்னுடைய முதல் பணியாக ராஜாஜி கொண்டுவந்த குலக்கல்வித் திட்டத்தினை கைவிட்டு, அவரால் மூடப்பட்ட 6000 பள்ளிகளைத் திறந்தார். மேலும், 17000 -த்திற்கும் மேற்பட்ட பள்ளிகளைத் திறந்ததோடு மட்டுமல்லாமல், பள்ளிக்குழந்தைகளுக்கு இலவச மதிய உணவு திட்டத்தினை ஏற்படுத்தி, ஏழை எளிய மக்களின் கல்வியில் முன்னேற்றத்தினை ஏற்படுத்தினார். இந்திய அரசியலில் தலைசிறந்ததாகக் கருதப்பட்ட இந்தத் திட்டம், உலக அளவில் பாராட்டப்படும் திட்டமாகவும் அமைந்தது. இதனால், ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் 7 சதவீதமாக இருந்த கல்வி கற்போரின் எண்ணிக்கை, இவருடைய ஆட்சியில் 37 சதவீதமாக உயர்ந்தது.

தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் சமூகத்தொண்டு செய்வதிலேயே அர்ப்பணித்துக்கொண்ட காமராஜர் அவர்கள், 1975 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் தேதி தன்னுடைய 72 வது வயதில் காலமானார். அதற்கு அடுத்த ஆண்டு, **இந்திய அரசின் மிக உயரிய**

**விருதான "பாரத ரத்னா" விருது மத்திய அரசால்** அவருக்கு வழங்கப்பட்டது. ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தபொழுதும் இறுதிவரை வாடகை வீட்டிலேயே வாழ்ந்து வந்தவர். **அவருக்காக அவர் சேர்த்து வைத்த சொத்து சில கதர் வேட்டிகள், சட்டைகள், புத்தகங்கள் மற்றும் 150 ரூபாய் மட்டுமே.** இப்படிப்பட்ட உன்னதமான நேர்மையான இன்னொரு தலைவனைத் தமிழக வரலாறு மட்டுமல்ல, உலக வரலாறும் இனி சந்திக்குமோ என்பது சந்தேகமே…? என்று கூறலாம்.

இந்தியாவின் மதிக்கத்தக்க இரண்டு பிரதமர்களை உருவாக்கி, **'இந்தியாவின் கிங் மேக்கராகத்'** திகழ்ந்த **பெருந்தலைவர் காமராஜர், 'பகைவர்களும் மதிக்கும் பண்பாளராகவும்', 'படிக்காத மேதையாகவும்', 'கல்வியின் நாயகனாகவும்', 'மனிதநேயத்தின் மறுஉருவமாகவும்'** திகழ்ந்தார்.

தமிழக வரலாற்றில் **கர்ம வீரர் என்றும், கருப்பு காந்தி** என்றும் இன்றும் போற்றப்படுபவர்.

நல்லாட்சி என்ற வானம் வசப்பட்டதற்கு அவருடைய சமதர்ம சிந்தனையும், நாடும் மக்களும் நலம்பெற வேண்டும் என்ற வேட்கையும், சுயநலமின்றி சமூக நலத்தொண்டு செய்ய வேண்டுமென்ற நல் எண்ணமே காரணம். நாமும் வாழ்க்கையில் நம்பிக்கையோடும் விடாமுற்சியோடும் போராடினால் தன்னலமற்ற தலைவராக உருவாகலாம்….!

**"பயிற்சியும் முயற்சியும் இருந்தால்**
**ஒவ்வொரு மனிதனும் சாதனையாளனே"**

**இணையாசிரியர்**

# உள்ளுறை

## காமராசர் பிறந்த தினம்


கவிதைகள்................................ 05 - 17

விடுகதை……………............. 17 - 17

பரிதிமாற்கலைஞர்……..............18 - 21

அப்துல்கலாம்………………........23 - 24

மறைமலைஅடிகள்.................... 27 - 28

மாவட்டச் சிறப்புகள்…….…..... 30 - 31

இயற்கை………………….............32 -32

# கவிதைகள்

## அப்பா

நான் பார்த்து வியந்த
கடின உழைப்பு நீதான்
எனக்காக நீ
எதை இழந்தாயோ – அவை
எதையும் நான் இழக்கவில்லை..
இந்த வாழ்க்கையே
உன்னால்தான்
என்னைக் கண்ணில்வைத்துப்
பார்த்துக்கொண்ட – அந்த
நாள் சொர்க்கம்....
சின்னச் சின்ன விஷயங்களை
நீ கற்றுக்கொடுத்தாய்
நீச்சலை கற்றுக்கொடுத்த
அழகை..
வாகனம் கற்றுக்கொடுத்த
அழகை....
மனம் மறக்க

முடியாமல்

நினைத்து நினைத்து நெகிழ்கிறது.......

**ம.பொற்சிழியன்**

**இரண்டாமாண்டு இயற்பியல் 'ஆ' பிரிவு**

## அன்பில் அம்மாவாக

முன் ஒருநாள் எனக்கு முத்தாகக்

கிடைத்து அளவில்லா அன்பை

எனக்கு அள்ளித்தந்தவள் - இன்றல்ல

என்றும் என் நெஞ்சில் இருப்பவள்.

எனக்கு தங்கை என பிறந்து

அன்பு ஏக்கத்தை விதைத்தவள்.

அன்பு மட்டுமே உண்மை என்பதை

இந்த உலகுக்குச் சொன்னவள்

அன்புத் தங்கை

அன்பில் அம்மா.....

**சீ.அரவிந்த்**

**இரண்டாமாண்டு இயற்பியல் 'ஆ' பிரிவு**

## ஏப்ரல் மாதத்தில்...

எங்கேயோ பிறந்து
எங்கேயோ வளர்ந்து
கல்லூரி எனும்
களத்தில் சந்தித்து
நட்பு எனும்

விதைகளை விதைத்து
நட்பை வளர்த்து
எந்நாளும் பழகிய
நினைவுகளைப் பகிர்ந்து கொண்டு
ஜுன் என்னும்
மாதத்தில் சந்தித்து
ஏப்ரல் என்னும்
மாதத்தில் பிரிவோமே....

**மா.சௌமியா**
**முதலாமாண்டு - இயற்பியல் 'ஆ' பிரிவு**

## வாழ்க்கை

இப்படித்தான் வாழ வேண்டும்
எனக் கூறினால் உன் வாழ்க்கையை
விட்டுக்கொடுக்காதே...
இப்படியும் வாழலாம் என்று
நல்வழியை நாலுபேருக்குக்
கற்றுக்கொடு...

**எம்.அனுஷ்கா**
**நுண்ணுயிரியல் முதலாமாண்டு**

## அக்கா

தேவையற்ற சேட்டைகள் செய்தாலும்
தேவையானபோது அன்பு கொள்வாள்!
என் தங்கையாக
அவளுக்காகத் திட்டல்கள் ஏற்பேன்
அவளுக்காக அனைத்தையும் செய்வேன்

ஏன் அவளுக்காகத் தாயாகவும் மாறுவேன்
அவளுடைய அன்பு அக்காவாக
எக்காலத்திலும்! என்றும்..!

**த.ஜனனி**
**நுண்ணுயிரியல் முதலாமாண்டு**

## இயற்கை

காணும் இடம் எல்லாம்
பச்சை நிறம்
இதை வர்ணிக்கத் தோன்றுதே
என் நெஞ்சின் ஒருபுறம்.
பூக்களின் வண்ண நிறம்
வண்ணத்துப் பூச்சியை
கவரச் செய்ததே!
இயற்கையின் அழகை
ரசிக்கச் செய்ததே ஒரு வேதியியல்
அதனால் உலகிற்கு உண்டானது
ஒரு மதிப்பியல்!
என்னை இயற்கையின் மடியில்
தவழச் செய்ததே இவ்வுலகவியல்.

**கு.நந்தக்குமார்**
**நுண்ணுயிரியல் முதலாமாண்டு**

## குழந்தை

ஒரு பார்வை சிறு புன்னகை
தீப்பொறி போன்ற கண்கள்
கோபக்கிளி போன்ற சிவந்த மூக்கு
ஈரம் படாமலே சிவந்துள்ள உதடு

கூட்ட நெரிசலுள்
அங்கும் இங்குமாய்
நீ திரும்ப
உன் முழுமதியைக்
காண ஏங்கினேன்
சட்டென்று நீ திரும்ப
உன் விழிப்
பார்வையில்
என் உடல் எரிந்ததடி
கண் முடித் திறக்கும்
ஒரு நொடியில்
உன் புன்னகையில்
என் உள்ளம் குளிர்ந்ததடி
ஒரே நொடியில் நீ தரும்
தண்டனை
ஏனோ இன்பமாய் உள்ளதடி
உன்னைக் கண்டவுடன்
என் குழந்தைப் பருவம்
நினைவில் வந்ததடி
நானும் குழந்தையில்
இப்படித்தான் இருந்திருப்பேனோ?

**எஸ்.அங்கு ராஜலட்சுமி**
**நுண்ணுயிரியல் முதலாமாண்டு**

## உரிமையைக் கைப்பற்றிடு

தரத்தை நீ
உணர்த்திட
வாழ்க்கையில்

உயர்ந்திட
விவசாயத்தைச் செய்திட
இயற்கையைக் காப்பாற்றிட
நோயில்லா உலகை உருவாக்கிட
அயல் நாட்டுத் திட்டத்தைத் தடுத்திட
நம் நாட்டு மரபினைக் காத்திட
முன்னோர்கள் செய்த செயலை
செயல்படுத்திட
தமிழனே! மூட நம்பிக்கையை விட்டு
வெளியே வா!
நம் சொத்து நம் உரிமையை
அடித்துப் பிடிங்கிட அவன் யாருடா!
கேள்வி கேளடா!
உன்னை நீயே காப்பாத்திக் கொள்ளடா!

**க.சுரேந்திரன்**
**நுண்ணுயிரியல் முதலாமாண்டு**

## துணைபுரியும் நட்பு

நெஞ்சில் கொண்ட காயத்தை
ஆற்ற வந்த தோழா!
வேசம் கலைந்து வந்து
உண்மை பேச வைக்கும்.
குடும்ப நிலை உணர்ந்து
வாழ்க்கைத் தூணாய் அமையும்.
மனதில் தைரியம் விதைத்து
துன்பத்தில் சந்தோஷம்
சேர்க்க வந்த மாயக்காரனோ!
இல்லை சொர்க்கத்தின் தேவனோ!

ஏன் இதழில் தேன் சொட்ட வரும்
பொன் சொற்களின்
அரசன் நீ தான்.
என் ஆருயிர் நண்பனும்
நீயேதான்...

**க.சுரேந்திரன்**
**நுண்ணுயிரியல் முதலாமாண்டு**

## வாழ்க்கை

பிறப்பது ஒருநொடி
இறப்பது ஒருநொடி
எண்ணற்ற சூழ்நிலைகள் வந்தாலும்
ஒவ்வொரு நொடியும்
சிரிக்க மறவாதே....

## அம்மா

பிறக்கும்போது என் அழுகைக்
குரலைக் கேட்டு
ரசித்தவள்.
அன்பு என்னும் உணவை
ஊட்டி வளர்த்தவள்.
ஒவ்வொருநொடியும் என்
புன்னகைக்காக
வாழ்பவள்...

**ச. ஜனித்தா**
**கணிதவியல் இரண்டாமாண்டு 'இ' பிரிவு**

## தாய்ப்பால்

இரும்புச் சிறையில்
இருந்துகூட தப்பிவிடலாம் - ஆனால்
தாயின் விழிச்சிறையில்
இருந்து தப்ப
முடியாது....

## நேசித்தல்

நீ அழும் போது முதலில்
ஆறுதல் சொல்வது
நீ நேசித்தவராக
இருக்கமாட்டார்!
உன்னை நேசித்தவராகத்தான்
இருப்பார்.

**சே.ஜீவிதா**
**கணிதவியல் இரண்டாமாண்டு ‘இ’ பிரிவு**

## வாழ்வில் எதுவும் அதிகம் வேண்டாம்

அன்பு காட்டு - ஆனால்
அடிமையாகிவிடாதே...
இரக்கம் காட்டு - ஆனால்
ஏமாந்துபோகாதே...
பணிவாய் இரு - ஆனால்
கோழையாகிவிடாதே...
கண்டிப்பாய் இரு - ஆனால்
கோபப்படாதே...

சிக்கனமாய் இரு - ஆனால்
கஞ்சனாய் இராதே...
சுறுசுறுப்பாய் இரு - ஆனால்
பதற்றப்படாதே
தர்மம் செய் - ஆனால்
ஆண்டியாகிவிடாதே....

**பூ.தேவிபிரியா**
**முதலாமாண்டு இயற்பியல் 'ஆ' பிரிவு**

## உண்மையான நட்பு

ஆபத்தில் உதவாத
நண்பனைவிட,
உன் கஷ்டத்தைப்
பார்த்துச் சிரிக்காத
எதிரியை நம்பு....

## நினைவுகள்

உன்னை நினைக்கும் போதெல்லாம்
ஒரு நட்சத்திரமாகத்
தோன்றினேன்..
இப்போது வானத்தைப் பார்
உன்னை எத்தனைமுறை
நினைத்தேன் என்று...

**இ.சரண்யா**
**கணிதவியல் முதலாமாண்டு 'இ' பிரிவு**

## நட்பு

வாழும்வரை வாழ்க்கை
வெல்லும்வரை தோல்வி
வலிக்கும்வரை கண்ணீர்
உதிரும்வரை பூக்கள்
மறையும்வரை நிலவு
மரணம்வரை நம் நட்பு....

**சி.பவித்ரா**

**முதலாமாண்டு இயற்பியல் 'ஆ' பிரிவு**

## நட்பு

வாழ்க்கையில் நம்பிக்கை
இருக்கனும் - ஆனால்
பிறரைநம்பி
இருக்கக் கூடாது.
உன்மீது நம்பிக்கை
இருந்தால்
தோல்வி கூட
உன்னை நெருங்கப்
பயப்படும்!
ஒருவனுக்கு நீ எதிரியாய்
கூடவாழ்ந்துவிடு - ஆனால்
துரோகியாக மட்டும்
வாழ்ந்துவிடாதே...
உயிரின் பாதிதொலைந்தும்
உலகில் வாழும்
ஓர்அதிசயம்.

அழகான உருவத்தைவிட
அழகான நடத்தையே
மிகநல்லது….

**ர.சுவேதா**
**உயிர்வேதியியல் முதலாமாண்டு**

## விடியல்

பிரியத்துடிக்கும்
மனதுக்கு
பிரிவின் வலி
தெரிவது இல்லை
பிரிவின் வலியைவிட
நினைவின் வலி
கொடுமையானது.

## புன்னகை

எப்போதும் உன்னோடு
இருக்கவே விரும்புகிறேன்.
உன் கோபத்தால்
என்னை தொலைத்துவிடாதே
இப்படிக்குப் புன்னகை…..

## உண்மை வரிகள்

நினைப்பவர்கள் எல்லாம்
நம்மோடு நிலைத்துவிட்டால்
பிரிவின் வலியும் நினைவின்
மொழியும் தெரியாமலே

போய்விடும்....

**ப.ராஜஸ்ரீ**

**முதலாமாண்டு இயற்பியல் 'ஆ' பிரிவு**

## பேச்சின் சிறப்பு

கோபமாய் பேசினால்
குணத்தை இழப்பாய்!
வேகமாய் பேசினால்
அர்த்தத்தை இழப்பாய்!

**மா.சௌமியா**

**முதலாமாண்டு - இயற்பியல் 'ஆ' பிரிவு**

## நட்பு

நண்பா என்று
அழைத்தபோதெல்லாம்
அன்பால் அரவணைத்த
ஓர் உயிர்
என் நட்பு....

## நட்புக்கு நன்றி

கடல் அலைகளைப் போல்
அலை அலையாய்
கவலை வந்தாலும்
எனக்காக அணையாய் நின்று
தடுத்த
நட்புக்கு நன்றி..!

## தாய்

ஒரு தாய் மகனின் அழுகையைக்
கேட்டு ரசிப்பது
ஒருமுறையே...
அது அவன் பிறந்தபோது
மட்டுமே....

**வே.பாரத்**
**கணிதவியல் முதலாமாண்டு 'அ' பிரிவு**

## நட்பு

அழுததை எல்லாம்
நினைத்துப் பார்த்தால்
சிரிப்புவரும் அதுஅன்பு....
சிரித்ததெல்லாம்
நினைத்துப் பார்த்தால்
அழுகைவரும் அதுநட்பு!!!!

## உறவு

அம்மா நீ என் கண்
அப்பா நீ என் மூளை
அண்ணா நீ என் கை
துணைவியே நீ என் இதயம்
நண்பா நீ என் இரத்தம்
இதில் எங்கு அடிப்பட்டாலும்
முதலில் வருவது இரத்தம் தான்...

**மு.தமிழரசன்**
**கணிதவியல் முதலாமாண்டு 'அ' பிரிவு**

# விடுகதை

» அனைவரையும் நடுங்க வைப்பான், ஆதவனுக்கு அடங்குவான் அது என்னா? **விடை** : குளிர்

» உணவு கொடுத்தால் வளரும் நீர் கொடுத்தால் அழியும் அது என்ன?
**விடை** : நெருப்பு

» ஊசி போல் இருப்பான். ஊரையே அழிப்பான். அது என்ன?
**விடை** : தீக்குச்சி

» தண்ணீர் இல்லாமல் வளரும் தரையில்லாமல் படரும் அது என்ன?
**விடை** : உரோமம்

» இதயம் போல் துடிப்பிருக்கும் இரவு பகல் விழித்திருக்கும். அது என்ன? **விடை** : கடிகாரம்

» நன்றிக்கு வால் கோபத்திற்கு வாய் அது என்ன?
**விடை** : நாய்

» உயரத்தில் இருப்பிடம் தாகம் தீர்ப்பதில் தனியிடம் அது என்ன?
**விடை** : இளநீர்

» தலையில் கிரீடம் வைத்த தங்கப்பழம் அது என்ன?
**விடை** : அன்னாசிப்பழம்

» படபடக்கும் பளபளக்கும் மனதுக்குள் இடம் பிடிக்கும் அது என்ன?
**விடை** : பட்டாசு

» சங்கீதம் பாடுபவனுக்கு சாப்பாடு இரத்தம் அது என்ன?
**விடை** : கொசு

**எம்.பிரியங்கா**
**நுண்ணுயிரியல் முதலாமாண்டு**

# பரிதிமாற் கலைஞர் பிறந்த நாள்

**ஜூலை 06.**




மதுரை அருகே விளாச்சேரி எனும் ஊரில் கோவிந்தசிவன் - லட்சுமி அம்மாள் தம்பதியர்க்கு மகனாகப் பிறந்தார். வடமொழியை தந்தையாரிடமும், தமிழை மதுரை சபாபதி முதலியாரிடமும் கற்றார். இளம் வயது முதல் தமிழ் மொழியின் மீதும், இலக்கண இலக்கியத்தின் மீதும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தவர். பின்னாளில் இளங்கலைப் பட்டப்படிப்பில் **தமிழ்மொழியிலும், மெய்யியலிலும்** மாநிலத்திலேயே முதலாவதாகத் தேறினார்.

இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் சூரியநாராயணன். பின்னாளில், சூரியநாராயண சாஸ்திரியர் என்று அழைக்கப்பட்டார். தமிழ் மேல் கொண்ட பற்றினால் தனது பெயரை வடமொழி கலக்காத தூய தமிழில் பரிதிமாற் கலைஞர் என்று தம் பெயரை மாற்றிக்கொண்டார்.

தமிழறிஞரும், நூலாசிரியரும், தனித்தமிழ் இயக்கத்தில் முதன்மையான பங்கு வகித்தவர்களில் ஒருவரும் ஆவார். இவர் உயரிய செந்தமிழ் நடையில் பேசுவதிலும் எழுதுவதிலும் வல்லவர். நாடகப் புலமை சான்றவர்.

"தமிழ் மொழி வரலாறு" போன்ற ஆய்வு நூல்களையும், கலாவதி, ரூபாவதி போன்ற நாடக நூல்களையும், நாடக இலக்கணமான நாடகவியலையும் இயற்றிவர். தமிழ்மொழியின் வரலாறு மற்றும் நாடகவியல் (நாடகங்களுக்கான இலக்கணம்) உட்பட பல நூல்களை எழுதினார். கலாவதி (1898), ரூபாவதி என்ற நாடக நூல்களை எழுதி தாமே கலாவதி, ரூபாவதி எனும் பெண் பாத்திரங்களில் நடித்தார். **இராவ்பகதூர் சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்களால் திராவிட சாஸ்திரி** என சிறப்பிக்கப்பட்டார். தனக்கு தமிழ் கற்பித்த ஆசிரியர் சபாபதி முதலியாரிடம் மிகுந்த பக்தி கொண்டிருந்தார். சபாபதி முதலியார் 1898 ல் மறைந்தபோது,

**"மாமதுரைப் பெம்மான்மேல் மாலையெனப் பேர்புனைந்து**
**காமர் சிலேடை வெண்பாக் கட்டுரைத்த பாவலனே**
**பாமணார் கோவே நீ பாரினைவிட் டேகியது**
**தாமதுரை சாமீ தமியேன்செய் தீவினையோ" .** என்று பாடி வருந்தினார். இது தவிர வடமொழியற்ற நல்ல தமிழ்மொழி வேண்டும் என்பதில் பெரும் முனைப்பு காட்டினார்.

தமிழக அரசு இவரது மரபுரிமையாளர் 19 பேருக்கு ரூபாய் 15 லட்சம் பரிசுத் தொகையாக அளித்து இவரது பதின்மூன்று நூல்களும் 2006 டிசம்பர் 2 அன்று தமிழக அரசால் அரசுடமையாக்கப்பட்டன.

இவர் 33 ஆண்டுகளே வாழ்ந்து மறைந்தபோது இவரது பேராசிரியர் மில்லர் (ஸ்காட்லாந்தைச் சேர்ந்தவர்) பின்வருமாறு புலம்பி அழுதுள்ளது அவரது ஆளுமைக்குச் சான்றாகும்:

**"என் புருவம் சுருக்கம் ஏறி, கண்களை மறைக்கும் முதுமையில் வாடுகின்றேன் நான். ஆனால் நடுவயது வருவதற்கு முன்னரே நற்றமிழ்ப்பரிதி அகன்றானே"** என்று பாடினார்.

நாவல், உரைநடை நாடகம், செய்யுள் நாடகம், கவிதை நூல், ஆய்வுநூல், நாடக இலக்கண நூல் என ஏராளமான நூல்களை எழுதியுள்ளார். குமரகுருபரர் எழுதிய நீதிநெறி விளக்கத்தின் 51 பாடல்களுக்கும் உரை எழுதியுள்ளார்.

பல தமிழ் அறிஞர்களின் வரலாற்றையும் எழுதியுள்ளார். சபாபதி முதலியாரின் திருக்குழந்தை வடிவேலன் பிள்ளைத்தமிழ், கலிங்கத்துப்பரணி, நளவெண்பா, பஞ்சதந்திரம் உட்பட 67 நூல்களைப் புதுப்பித்து வெளியிட்டார்.

ஞானபோதினி, விவேகசிந்தாமணி இதழ்களில் தான் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து 'தமிழ் வியாசங்கள்' என்ற பெயரில் வெளியிட்டார். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதத்தில் புலமை பெற்றவர்.

**தமிழ்-தமிழர் முன்னேற்றத்துக்காக வாழ்நாள் முழுவதும் பாடுபட்ட பரிதிமாற் கலைஞர் 1903-ல் மறைந்தார். ''33 ஆண்டுகளே வாழ்ந்த இவர் அரிய சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்.** இவர் அதிக காலம் வாழ்ந்திருந்தால், **தமிழ் அன்னை அரியாசனத்தில் அமர்ந்திருப்பார்(ள்)''** எனத் தமிழ்த் தென்றல் திரு.வி.க. இவருக்குப் புகழாரம் சூட்டியுள்ளார்.




**செ.தங்கராஜ்**
**உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை**

## இந்தியாவின் முதன்மையானவர்கள்

1.இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் முகவுரையை தயாரித்தவர் யார்? **ஜவஹர்லால் நேரு**

2.இந்தியாவின் முதல் ஜனாதிபதி யார்?

**டாக்டர்.இராஜேந்திர பிரசாத்**

3.இந்தியாவின் முதல் பிரதமர் யார்?

**பண்டித ஜவஹர்லால் நேரு**

4.இந்தியாவின் முதல் பெண் பிரதமர் யார்?

**இந்திராகாந்தி**

5.இந்தியாவின் முதல் பெண் ஆளுநர் யார்?

**சரோஜினி நாயுடு**

6.இந்தியாவின் முதல் பெண் முதல்வர் யார்?

**சுசிதாகிரி பாலனி**

7.நோபல் பரிசு பெற்ற முதல் இந்தியர் யார்?

**இரவிந்தரநாத் தாகூர்**

8.இந்தியாவில் முதல் இரயில் ஓடிய வழித்தடம் எது?

**மும்பை-தானே**

9.இந்தியாவின் முதல் விமானி யார்?

**ஜே.ஆர்.டி. டாடா**

**நே.நந்தினி**

**உயிர்த்தொழில் நுட்பவியல் முதலாம் ஆண்டு 'ஆ' பிரிவு**

**அப்துல்கலாம் நினைவு நாள்**
**27-07-2015**



இந்தியாவிற்கு வெளியே இந்தியாவின் அறிவடையாளமாய் விளங்கிய ஒரு ஞானப்பெருமகன் நம்மிடையே இனி இல்லை என்பதை நம்ப முடியவில்லை.

இந்தியாவின் கடைக்கோடியில் கடைசி குடிமகனாய் பிறந்து இந்தியாவின் முதல் குடிமகனாய் உயர்ந்தது சந்தர்ப்பத்தால் வந்தது அல்ல. சாதனையால் வந்தது.

**அணு விஞ்ஞானி அப்துல்கலாம் பெருமுயற்சியால் இந்தியா தன் சொந்த ஏவுகணையை செலுத்தியபோது, வெள்ளை மாளிகையே அண்ணாந்து பார்த்தது.** அவர் அறிவின் துணையால் பொக்ரான் அணுகுண்டு சோதிக்கப்பட்ட போது, வல்லரசுகள் எல்லாம் மூக்கின் மேல் விரல் வைத்தன. அரசியலுக்கு வெளியே இருந்து அவர் குடியரசுத் தலைவராக ஆன போது இந்தியாவே எழுந்து நின்று கைதட்டியது. **தாய்மொழி வழிக்கல்வி கற்ற ஒருவர் தாயகத்தையே ஆளமுடியும் என்ற அரிய சாதனையை நிகழ்த்தியவர் அப்துல்கலாம்.**

அவர் படிப்பில் ஞானி. பழக்கத்தில் குழந்தை. **40 பல்கலைக்கழகங்களில் டாக்டர் பட்டம்** பெற்றும் அதை தன் தலையில் சூடிக் கொள்ளாதவர். இந்த நூற்றாண்டில் இளைய சமுதாயத்தின் கனவு நாயகன். இளைஞர்களை கனவு காணச் சொன்னவர். **'தூக்கத்தில் காண்பதில்லை கனவு, உங்களைத் தூங்க விடாததே கனவு'** என்று லட்சியத்திற்கு இலக்கணம் எழுதியவர்.

தன் கடைசி நிமிடம் வரை இளைஞர்களுக்கு கற்றுக் கொடுப்பதிலேயே அவரது காலம் கழிந்தது. அவர் பிரம்மச்சாரி தான், ஆனால் இந்தியாவே அவரது குடும்பம். அவர் எந்த செல்வத்தையும் சேர்த்து வைக்கவில்லை. அவரது ஞானச்செல்வம் தான் அவர் இந்தியாவிற்கு எழுதி வைத்திருக்கும் சொத்து.

தடம் மாறும் சமூகமும், தடுமாறும் அரசியலும் அப்துல்கலாமின் ஒழுக்க நெறிகளை பின்பற்றினால் நாடு நலம் பெறும். அப்துல் கலாம் இந்தியாவிற்கு எழுதி வைத்து போகும் மரணவாசகம் இதுவாகத்தான் இருக்கும்.

அப்துல்கலாம் தன் செயல்களால் வாழ்ந்துகொண்டே இருப்பார். **தேசத்தின் நதிகளிலும், மலைகளிலும், மரங்களிலும், மலர்களிலும், மக்கள் மனங்களிலும் அவர் வாழ்ந்து கொண்டே இருப்பார்.**

அய்யா அப்துல்கலாம் அவர்களே... உங்கள் புகழை வாழ்நாள் எல்லாம் உயர்த்திப்பிடிக்கும் திருக்கூட்டத்தில் ஒருவனாய் நானும் இருப்பேன் என்றார் கவிப்பேரரசு. கண்ணீரோடு வணங்கிய கவிப்பேரரசு வைரமுத்துவோடு **தமிழ்த்துறை விடியல் இதழும்** வணங்குகிறது...




**இணையாசிரியர்**

## பாரத ரத்தினங்கள்

இந்திய அரசு வழங்கும் விருதுகளில் மிக உயரிய விருதான **"பாரத ரத்னா"** விருதினைப் பெற்ற தமிழர்கள்.

1. சி.இராஜகோபாலச்சாரி 1954
2. டாக்டர் சர்.சி.வி ராமன் 1954
3. கே.காமராசர் 1976
4. எம்.ஜி ராமச்சந்திரன் 1988
5. டாக்டர் ஏ.பி.ஜே அப்துல்கலாம் 1997
6. எம்.எஸ் சுப்புலட்சுமி 1998
7. சி.சுப்பிரமணியம் 1998

**B.வினிதா**

**உயிர்த்தொழில் நுட்பவியல் முதலாம் ஆண்டு 'அ' பிரிவு**

## நேரமில்லை

என் அன்பைச் சொல்ல நேரமில்லை
நீ என் கண்ணீரை துடைக்கும் போது
சிந்திக்க நேரமில்லை
நீ என் சிந்தையில் இருக்கும் போது...
சுவாசிக்க நேரமில்லை
உன்னை நேசிக்கும் போது...
நிலவைப் பார்க்க நேரமில்லை
உன்னைப் பார்க்கும்போது...

மழையில் நனைய நேரமில்லை
உன் அன்பில் நனையும் போது...
தாயே!!!

**பே.வெ.ரம்யா**

**உயிர்த்தொழில் நுட்பவியல் முதலாம் ஆண்டு 'ஆ' பிரிவு**

## வாழ்க்கை

தேவை இருக்கும் வரை
தேடல் முடிவதில்லை
நம்பிக்கை இருக்கும் வரை
வாழ்க்கை சலிப்பதில்லை
அழுகையுடன் பிறந்தோம்
ஆசையுடன் வளர்ந்தோம்
வாழ்க்கை என்னும் முயற்சியையும்
முன்னேற்றத்தையும்
அனுதினமும் ரசிப்போம்...

**வெ.கீர்த்தனா**

**உயிர்த்தொழில் நுட்பவியல் முதலாம் ஆண்டு 'ஆ' பிரிவு**

## நேசம்

காரணத்தோடு யாரையும் நேசிக்காதே
காரணமின்றி யாரையும் வெறுக்காதே...
இரண்டுமே
உன்னைக் காயப்படுத்தும்...

**ப. கவியரசன்**

**முதலாமாண்டு கணினி அறிவியல் துறை**

## அம்மா

இன்பத்திலும் துன்பத்திலும்
மனம் விட்டுப் பேச
ஒருவர் இல்லாதப் போதுதான் தெரியும்
உண்மையான அன்பின் பெருமை
ஒரு தாய்க்காக
எதையும் இழக்கலாம் - ஆனால்
எதற்காகவும் தாயை இழக்காதே.....

**ப.திவ்யபாரதி**
**இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு**

## மறைமலை அடிகள் பிறந்த நாள் இன்று 15-07-1876



"பண்டு தொடங்கிப் புனிதமாய் ஓங்கி நிற்கும்
நம் தனித் தமிழ்த்தாயைப் பிறமொழிச் சொற்கள்
என்னும் கோடாரியினுள் நுழைந்துக் கொண்டு,
இத்தமிழ்ப் புதல்வர் வெட்டிச் சாய்க்க
முயல்வதுதான் கலிகாலக் கொடுமை!
இத்தீவினை புரியும் இவர் தம்மைத் தடுத்து,

எம் தமிழ்த்தாயைப் பாதுகாக்க
முன்நிற்கும் எம்போல்வாரது நல்வினைச்
செயல் ஒருகாலும் கலிகாலக்
கொடுமை ஆகாது என்று
உணர்மின்கள், நடுநிலையுடையீர்”!
“மக்களை விட்டு மொழியும், மொழியை விட்டு
மக்களும் உயிர்வாழ்தல் சிறிதும் இயலாது.
எனது விருப்பப்படிதான் யான் பேசும்
மொழியைத் திரித்தும்,
அயல்மொழிச் சொற்களோடு கலந்து
மாசு படுத்தியும் வழங்குவேன்
அம்மொழியின் அமைப்பின்படி யான்
நடக்கக் கடவேன் அல்லன்” என்று
ஒவ்வொருவனும் தனது மொழியைத்
தன் விருப்பப்படி எல்லாம் திரித்துக் கொண்டு
போவானாயின் சிறிது காலத்தில்
ஒரு மக்கட் கூட்டத்தாரிலேயே ஒருவரை
ஒருவர் அறிந்து கொள்ள முடியாத
வகையாய் ஒவ்வொரு சிறு கூட்டத்திற்கும்
ஒவ்வொரு புதுமொழி காலந்தோறும்
உண்டாகி அம்மக்களை ஒன்று சேரவிடாமல்
அவர்களைப் பல சிறு கூட்டங்களாகப் பிரித்து விடும்”

**தனித்தமிழ் வளர்த்த மறைமலைஅடிகளை**
**விடியல் வாழ்த்தி**
**வணங்குகிறது.**

## தாய்

குடையை எடுத்து
ஏன் போகவில்லை என்று
கோபித்தாள் அக்கா....
மழை நின்றபின்
வந்து தொலைக்கலாமே
என்றான் அண்ணன்.....
நாளை டாக்டருக்கு
நூறு ரூபாய் என்றார்
அப்பா....
துண்டு எடுத்து
துடைத்துக்கொண்டு சொன்னால்
அம்மா....
பாலாய்ப் போன மழை
என் பிள்ளையை
நனைத்து விட்டதே......

**ப.திவ்யபாரதி**
**இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு**

## அம்மா

அம்மா நீ இருக்கும் வரை அன்பிற்கு
கவலை இல்லை!
காதல் இருக்கும் வரை கண்ணீருக்கு
கவலை இல்லை!
நண்பன் இருக்கும் வரை சந்தோசத்திற்கு
கவலை இல்லை!

**எஸ். அபிராமி**
**முதலாமாண்டு ஆடை வடிவமைப்புத்துறை**

# மாவட்டச் சிறப்புகள்

## காஞ்சிபுரம் மாவட்டம்

**காஞ்சிபுரம்:** பல்லவர்களின் தலைநகரமாக விளங்கிய இடம். இங்குள்ள காமாட்சியம்மன் ஆலயம், ஏகாம்பரேசுவரர் ஆலயம், வரதராஜப் பெருமாள் ஆலயம், கைலாசநாதர் ஆலயம் போன்றவை பல்லவர் கால சிற்பத்திறனை பறைசாற்றும் வண்ணம் அமைந்துள்ளன. பட்டுச் சேலைக்குப் பெயர் பெற்ற நகரம் இது. மறைந்த தமிழக முதல்வர் அண்ணா பிறந்ததும் காஞ்சிபுரத்தில்தான்.

**மாமல்லபுரம்:** பல்லவர் கால குடைவரைக் கோயில்கள் நிறைந்த இடம். வங்கக் கடலின் கரையோரம் அமைந்த பல்லவர் காலத் துறைமுக நகரம்.

**வேடந்தாங்கல்:** இது பறவைகளின் சரணாலயம். வெளிநாடுகளில் இருந்து பல பறவைகள் இங்கு வந்து தங்கிச் செல்கின்றன.

**முதலைப் பண்ணை,ஆமைப் பண்ணை:** சென்னையிலிருந்து மாமல்லபுரம் செல்லும் வழியில் அமைந்துள்ளன. பல வகையான முதலைகளும் ஆமைகளும் இங்கு இயற்கைச் சூழலில் வளர்க்கப்படுகின்றன.

**திருக்கழுகுன்றம்:** பல்லவர் காலத்திய சிவன் கோயில் அமைந்துள்ள இடம். குறிப்பிட்ட நேரத்தில் இரண்டு கழுகுகள் வந்து உணவருந்திச் செல்வது

காணக்கிடைக்காத காட்சி.12 ஆண்டுகளுக்கு ஒரு முறை இக் கோயில் குளத்தில் ‘வெண்சங்கு’ உருவாகி வெளியே வருகிறது. இதுவரை வெளிவந்துள்ள சங்குகள் இக்கோயிலில் பாதுகாக்கப்பட்டு பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

**புலிகட்:** சென்னை எண்ணூருக்கு அருகில் டச்சுக்காரர்கள் ஆட்சி செய்த கோட்டை இடிபாடுகள் காணப்படும் இடம்.

## சேலம் மாவட்டம்

**மாரியம்மன் கோயில்:** கோட்டை மாரியம்மன் எனப்படும் இக் கோயில் மிகச் சிறப்பு வாய்ந்தது. இங்கு நடைபெறும் திருவிழாவிற்கு பல ஊர்களிலிருந்து. வந்து, மக்கள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுகிறார்கள். காவல் தெய்வமாகவும் விளங்குகிறது.

**ஏற்காடு:** இயற்கை எழில் மிக்க மலைவாழ் இடங்களுள் இதுவும் ஒன்று.

**மேட்டூர்:** காவிரியாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பெரிய நீர்த்தேக்கம் இது. ‘ஸ்டான்லி நீர்த்தேக்கம்’ எனப்படும். இவ்வணை ராஜாஜி முதல்வராக இருந்த போது கட்டப்பட்டது. டாக்டர். எம். விசுவேசுவரய்யா அவர்களால் வடிவமைத்துக் கொடுக்கப்பட்டது.


**முனைவர்.கோ.இரவிச்சந்திரன்**
**தமிழ் இணைப்பேராசிரியர்**


## இயற்கை


தினமும் எழும் சூரியனே...
உன்னை யார் எழுப்புகிறார்?
துணையே இல்லாத நிலவே
யாருக்காக தினமும் காத்திருக்கிறாய்?
மேகமே உனக்கு என்ன அவ்வளவு
சோகம் மழையாய்ப் பொழிகிறாய்....!
வானவில்லே....
ஏழுவண்ணத்தில் யாருக்காகப்
பாதை அமைக்கிறாய்........
எல்லாம் மனிதனுக்காக இல்லை ஆனால் நாம்
அனைத்தையும் எடுத்துக்கொண்டோம்....

**த. தீபிகா**
**நுண்ணுயிரியல் முதலாம் ஆண்டு**













Art
By,
Gowsalya.N
II - BSc (Maths) - B


R. Dinesh
II - year
B.Sc (PHY) - A